செ.வெ. எண்: 285 நாள்: 29/03/2010

<u>செய்தி வெளியீடு – 29.3.2010</u>

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றின் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் பயன் அடையும் வகையிலும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் பொருள்களையும், மலிவு விலையில் வழங்கப்படும் 10 மளிகைப் பொருள்களையும் தொடர்ந்து 30.6.2011 வரை நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9